RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22333

OPEN ACCESS

# செவ்விலக்கியங்களில் காட்டும் விழாக்கள்

## செ.வே. செல்வம் [அ, *]

[அ] தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

ஆ தமிழ்த்துறை, வி.இ.நா. செந்தில்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா.

# Ceremonies Showing in Classical Literature

## S.V. Selvam [a, *]

[a] Department of Tamil, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

[b] Department of Tamil, V.H.N. Senthikumara Nadar College, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author:
selvam.sv@vhnsnc.edu.in

Received: 14-03-2022
Revised: 16-06-2022
Accepted: 22-06-2022
Published: 27-07-2022

Check for updates

**ABSTRACT**

In primitive times, humans who wandered independently in their habitats without worrying about shelters needed to adapt their lifestyles to protect themselves from other life forms and to obtain the factors they needed to survive. People who had been living separately came together and started living in ethnic groups. The ceremony was a tool for the man who was destined to live like this out of fear of survival and to associate himself with his ethnic groups. And this festival was a factor in the evolution of this ethnic group into a society. Used as a tool in the early stages, the festival later evolved into a part of depicting the traditions and culture of a human-based society headed by a distinct ethnic group. In the course of time, this festival has become a reflection of the living arrangements of the people of that time and the materials used, customs and social systems depending on their environment. This article describes the events that took place from the beginning to the end of the festivals celebrated in Classical Literature.

**Keywords:** Classical Literature, Festivals, Ethnic Group, Events

## முன்னுரை

ஆதிகாலத்தில் கிடைத்ததை உண்டு, உறைவிடங்களைப் பற்றி கவலைப்படாமல் தான் வாழ்ந்த வாழிடங்களில் தனித்தனியாக திரிந்த மனிதர்கள், பிற உயிர்களிடமிருந்து தன்னைக் காக்கவும், தான் வாழத் தேவையான காரணிகளைப் பெறவும் தன் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்க வேண்டியச் சூழல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. தனித்தனியாக திரிந்து வாழ்ந்த மனிதர்கள் கூடி ஓர் இனக் குழுக்களாக வாழ ஆரம்பித்தார்கள். அவ்வாறு வாழத் தலைப்பட்ட மனிதன் உயிர்அச்சத்தின் காரணமாகவும், தன் இனக் குழுக்களுடன் தன்னை இணைவித்துக் கொள்ளவும் ஒரு கருவியாக இருந்தது விழாவாகும். மேலும் இவ்வினக்குழு சமுதாயமாக பரிணாம வளர்ச்சி பெற இவ்விழா ஒரு காரணியாக இருந்தது. ஆரம்பக் காலக் கட்டங்களில் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்ட இவ்விழா பின்னாளில் தனித்தனியாக இனக்குழுவாகத் தலைப்பட்ட மனிதர்கள் சார்ந்த சமுதாயத்தின் மரபு மற்றும் பண்பாட்டின் மரபுகளைச் சித்திரிக்கும் ஒரு பகுதியாக உருபெற்றது. காலப் போக்கில் இவ்விழா அக்கால மக்களின் வாழ்விடங்களின் அமைவின் பிரதிபலிப்பாகவும், அவர்களின் சூழல் சார்ந்து பயன்படுத்திய பொருட்கள், பழக்கவழக்கங்கள் சமுதாய முறைமைகள் ஆகியவற்றை அறிந்து